# ததீயாராதனம்

ஸ்ரீ உ.வே. P.T. சேஷாத்ரி ஸ்வாமி,

ஆராதனானாம் ஸர்வேஷாம் விஷ்ணோ: ஆராதனம் பரம்
தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதனம் ।

என்று மற்ற தேவதைகளை ஆராதிப்பதைக் காட்டிலும் விஷ்ணுவினுடைய ஆராதனம் மிகவும் உயர்ந்தது. அவ்விஷ்ணுவை ஆராதிப்பதில் காட்டிலும் அவ்வெம்பெருமானின் அடியார்களை ஆராதிப்பது மிகவும் சிறந்ததாக ஆன்றோர்கள் பகர்கின்றனர்.

தத் என்னும் சொல் எம்பெருமானையும்,

ததீயா: என்னும் சொல் எம்பெருமானைச் சேர்ந்தவர்களையும் காட்டும்.

எம்பெருமானையும், அவன் அடியார்களையும் ஆராதிப்பதாகிய ததியாராதனம் என்னும் விஷயமாக கீர்த்தி மூர்த்தியாய், கருணைமுகிலான காரப்பங்காடு ஸ்வாமியின் நூற்றாண்டு விழாவின் அங்கமாக மலர இருக்கின்ற மலரில் ஒரு சில வார்த்தைகளை விண்ணப்பிக்க வேண்டும் என்னும் பெரியோர்களின் ஆக்ஞையை சிரமேற்கொண்டு யதாமதி சில விஷயங்களை விண்ணப்பிக்கின்றேன்.

''அன்னதாதா பயத்ராதா வித்யாதாதா ததைவச
ஜனிதாச உபனேதாச பஞ்சைதே பிதர: ஸ்ம்ருதா:

என்று தந்தைக்கு சமமாக ஐவர் கருதப்படுகிறார்கள். அவர்கள் (1) அன்னம் இட்டவன், (2) பயத்தைப் போக்கியவன், (3) கல்வியைக் கொடுத்தவன், (4) நம் பிதா (தந்தை), (5) உபநயனம் செய்வித்தவன் என்று அன்னத்தை இட்டவனை தந்தையாகக் கருதுகிறது.

''அந்நம் ப்ராணம்'' என்றும் ''அதிதி தேவோ பவ'' என்றும்

மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே.

என்று அதிதிஸத்காரத்தை மிகவும் போற்றுவதைக் காண்கிறோம்

நைமிசாரணியத்து உறைகின்ற எம்பிரானை போற்றி பரவும் திருமங்கை மன்னன் ஓர் விஷயத்தைக் காட்டி எம்பிரானிடத்தில் விண்ணப்பிக்கிறார்.

இடும்பையால் அடர்ப்புண்டு இடுமினோ துற்றென்று
இரந்தவர்க்கு இல்லையே என்று
நெடுஞ்சொலால் மறுத்த நீசனேன் - அந்தோ
நினைக்கிலேன் வினைப்பயன் தன்னை. (பெரியதிருமொழி - 3-6-5)

இதன் கருத்து : வறுமையால் வருத்தமுற்று, ஒரு கவளம் சோறு இடுங்கள் என்று கதறுகின்றவனுக்கு ஒன்றும் இல்லை என்ற கடுஞ்சொற்களைப் பேசி மறுத்தவன், ஏனெனில் வினைப்பயன் தன்னை அடியேன் அரியவில்லை என்பதாகக் காட்டுகிறார்.

மேலும், பசிக்கும், மிகுந்த பசிக்கும் உள்ள வேறுபாட்டினை சங்ககால புலவர் ஒருவர் பாடிய பாடலிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

ஒப்புடன் முக மலர்ந்தே உபசரித்து உண்மை பேசி
உப்பில்லா கூழிடினும் உண்பதற்கு அமிர்தம் தானே
முப்பழமோடு பால் அன்னம் முகம் கடுத்து இடுவராயின்
கப்பிய பசியினோடு கடும் பசி ஆகும் தானே.

என்று முகமலர்த்தியோடு இடப்படுகின்ற அன்னத்தின் பெருமையை காட்டுகிறது. மேலே காட்டியவைகள் சாமான்ய தர்மம். விசேஷ தர்மத்திற்கு எதை அடையாளமாக காட்டலாம் எனில்

பூஜனாத் விஷ்ணு பக்தானாம் புருஷார்தோஸ்தி நேதர:
தேந தத் த்வேஷத: கிஞ்சின்னாஸ்தி நாஸநம் ஆத்மந:

விஷ்ணு பக்தர்களை ஆராதிப்பதைக் காட்டிலும் சிறந்த புருஷார்த்தம் வேறில்லை. பாபங்களுள் விஷ்ணு பக்தர்களை த்வேஷிப்பதைக் காட்டிலும் ஆத்ம நாஸத்தை விளைக்கக் கூடியது வேறில்லை.

'ஷஷ்டி வர்ஷ ஸஹஸ்ராணி விஷ்ணோர் ஆராதனே பதலம்''
ஸக்ருத் வைஷ்ணவ பூஜாயா: கலாம் நார்ஹதி ஷோடஸீம்

அறுபதினாயிரம் வருடங்கள் விஷ்ணுவை ஆராதிப்பதனால் வரும் பலமானது ஒரு முறை ஓர் வைஷ்ணவனை ஆராதிப்பதனால் வரும் பலனின் பதினாறில் ஒரு பங்குக்கு ஒப்பாகாது.

என்று விஷ்ணு பக்தர்களை ஆராதிக்கும் முறை மிகவும் சிலாகிக்கத்தக்கது. பொங்கும் பரிவாலே பெரியாழ்வார் என்னும் பெயர் பெற்ற பட்டர் பிரான் திருக்கோட்டியூர் என்னும் திவ்யதேசத்துள்ள ஸ்ரீவைஷ்ணவர்களின் சிறப்பினைக் காட்டும் பாங்கும் நன்கு ரஸிக்கத்தக்கது.

''காசின் வாய் கரம் விற்கிலும் கரவாது மாறு இலி சோறு இட்டு
தேச வார்த்தை படைக்கும் வண் கையினார்கள் வாழ் திருக்கோட்டியூர்
கேசவா புருடோத்தமா கிளர் சோதியாய் குறளா என்று
பேசுவார் அடியார்கள் எம் தம்மை விற்கவும் பெறுவார்களே.''

(பெரியா - திருமொழி - 4 - 4- 10)

திருக்கோட்டியூரில் உள்ள பகவத் பக்தர்கள் ஒரு தங்கக் காசு கொடுத்தால் ஒரு கை நெல் விற்கும் பஞ்ச காலத்திலும், ப்ரத்யுபகாரத்தை எதிர் நோக்காது, பசியுடன் வரும் பாகவதர்களுக்கு அன்னமிட்டு, தங்கள் வரவு எங்கள் பாக்யம் என உபசார வார்த்தைகளைப் பேசி அள்ளி வழங்கும் கைகளைப் பெற்றவர்கள். கேசவா, புருஷோத்தமா, வாமனா என்று பேசும் இத்தகு திருமால் அடியார்கள் தங்கள் தேவைக்காக என்னை விற்கவும் உரிமை பெற்றவர்கள். என்றும்

நாவ காரியம் சொல்லிலாதவர் நாடொறும் விருந்தோம்புவார் வாழ் திருக்கோட்டியூர் என்றும்,

''திருமால் அடியார்களை பூசிக்க நோற்றார்களே'' என்று குலபதியான நம்மாழ்வார் அருளிய ஸ்ரீஸூக்திகளும், மற்றவைகளும் மனனம் செய்யத்தக்கது.

''துர்லபோ மானுஷோ தேஹ:'' என்றும் அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்றும் மனிதப் பிறவியினை மிகவும் போற்றுகின்றனர் ஆன்றோர்கள். அம்மனிதப் பிறவியினை நான்கு ஆஶ்ரமங்களாகப் பிரித்து வைத்துள்ளனர். அவை முறையே (1) ப்ரம்மசர்யம், (2) க்ருஹஸ்தாஶ்ரமம், (3) வானப்ரஸ்தம், (4) சன்யாஸ ஆஶ்ரமம். இந்நான்கு ஆஶ்ரமத்துள் க்ரஹஸ்தாஶ்ரமம் அனுஷ்டிப்பார்க்கு, க்ரஹஸ்தனுடைய ஸத்காரம் இன்றியமையாதது. க்ருஹஸ்தனை வேதங்களும், ரிஷிகளும், ஆன்றோர்களும், மிகவும் கொண்டாடிப் பேசுகின்றனர். அவ்வாறு மிகவும் கொண்டாடும்படியாக இருக்கக் காரணம் அதிதி ஸத்காரம் என்பதே.

ப்ரம்மசாரிகளும், சன்யாஸிகளும், க்ருஹஸ்தனை அண்டி ''பிக்ஷாம் தேஹி'' என்று கேட்டு இரந்து ஆஶ்ரமம் நடத்த வேண்டியுள்ளதை சாஸ்திரம் அனுமதித்துள்ளது. யதிகள் ஸ்வயம் பாகம் நடத்தலாகாது என்பதற்கு ஏராளமான ப்ரமாணங்கள் உண்டு. சன்யாஸிகள் பிக்ஷை வாங்குவது சாதுர்மாஸ்ய சங்கல்பத்தில் தற்பொழுது நடைபெற்று வருகிறது. க்ருஹஸ்தன் செய்து வரவேண்டிய அதிதி ஸத்காரம் பஞ்ச மஹாயஜ்ஞத்துள் அடங்கிய ஒரு பகுதியே. (1) பித்ரு யக்ஞம், (2) மநுஷ்ய யக்ஞம், (3) பூத யக்ஞம், (4) தேவயக்ஞம், (5) ப்ரம்மயக்ஞம் ஆகிய ஐந்து யக்ஞங்களில் அன்னத்தைக் கொண்டு செய்ய வேண்டியது அவசியமானதாக உள்ளது. திருவாய்மொழி 8-ம் பத்து (நெடுமாற்கடிமை பதிகம்) பலஸ்ருதியில் நம்மாழ்வார்

''நல்ல பதத்தால் மனை வாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே'' என்று அருளிச் செய்கிறார். அவ்விடத்தில் தெள்ளியதாம் நம்பிள்ளை செப்பு நெறியாக நன்குரைத்த ஈடு முப்பத்தாறாயிரப் படியின் வ்யாக்யானத்தில் (நல்லபதமாகிறது) - பாகவத ஶேஷத்வமிறே, அத்தை இத்திருவாய்மொழியிலே இவர் நிஷ்கர்ஷித்தபடியாலே, அத்தோடே கூட (மனைவாழ்வர்) கார்ஹஸ்த்ய தர்மம் அநுஷ்டிக்கப் பெறுவர் (கொண்ட இத்யாதி) தாங்களொன்றை நினைக்க பரிகரமொன்றை நினைக்கையன்றிக்கே, ஸபரிகரமாக பாகவதர்களுக்கு உறுப்பாக வர்த்திக்கப் பெறுவர் என்று அருளிச்செய்திருக்கும் ஸ்ரீஸூக்தி க்ருஹஸ்தாஶ்ரம தர்மத்தின் பெருமையை நன்கு விளக்குகிறது.

கடோபநிஷத் : அக்கினி தேவனே அதிதி ரூபனாக நமது க்ருஹத்துக்கு வருகிறார், அவனுக்கு அர்க்யம், பாத்யம் முதலிய உபசாரங்கள் செய்து அவனைச் சாந்தி செய்தல் வேண்டும் என்றும், இல்லாவிட்டால் "குடும்பி க்ருஹத்தில் ஸங்காதஹதம்" நிச்சயம் என்று அறுதியிடுகிறது.

தாமரைக் கண்ணன் உலகினை போற்றி பேசுகின்ற திருவள்ளுவர்

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு

ஐம்புலத்தார் ஓம்பல் தலை

என்கிறார். அதாவது பித்ருக்கள், தேவர்கள், விருந்தினர், சுற்றத்தவர் மற்றும் தன் ஆராத்ய தேவதையிடத்தும் செய்யும் அறநெறியைக் குற்றமில்லாமல் செய்தல் இல்லறத்தை மேற்கொண்டவனுக்கு அறமாகக் காட்டுகிறார்.

ப்ரம்மத்தை அடைவதற்கு உபாயம் யாது? என்று வேதாந்தங்கள் ஆராய்ச்சி செய்துகொண்டு போந்து முடிவாக த்ருவாநு ஸ்ம்ருதியே ஸாதனமாகுமென்று தீர்மானித்தன.

த்ருவாநு ஸ்ம்ருதி என்றால், மற்றோர் ஞானத்தால் மறைக்கப்படாத ஸ்ம்ருதி ஸந்ததியாகும். இது உண்டாவதற்குக் காரணத்தை விசாரித்து வருகிறவிடத்தில் இவ்விஷயத்தை விளக்க வந்த எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தில் (1) ஸத்கர்ம அனுஷ்டானங்கள், (2) ஶமாதியும் இதற்கு சாதனம் என்று தீர்மானித்தார். இதற்கு (த்ருவாநு ஸ்ம்ருதிக்கு) அங்கங்களாக் விவேகம், விமோகம், அப்யாசம், க்ரியை, கல்யாணம், அநவஸாதம், அநுத்தர்ஷம் என்னும் ஏழினுள்,

விவேகம், கிரியை - ஸத்கர்மானுஷ்டானத்தையும், மற்றவைகளான விமோகம், அப்யாசம், கல்யாணம், அநவஸாதம், அநுத்தர்ஷம் ஆகிய ஐந்தும் மனத்தூய்மையையும் உணர்த்தும். ஆக த்ருவாநு ஸ்ம்ருதியின் இச்சைக்கு,

(1) ஸத்கர்ம அனுஷ்டானமும் (2) மனத்தூய்மையும் காரணமாயிற்று. இவற்றில் முதலில் கூறிய விவேகம் - தேஹ ஸுத்தியை குறிப்பிடுகின்றது. தேஹஸுத்தி அன்ன ஸுத்தியால் உண்டாகும். அன்னஸுத்தியால் ஸத்வ குணமும், ஸத்வ குணத்தால் த்ருவாநு ஸ்ம்ருதியும் உண்டாகும்.

ஸம்ஸாரபோகி ஸந்தஷ்ட ஜீவ ஜீவாதுவாரான பிள்ளை லோகாசார்யார் தாம் அருளிச்செய்த அர்த்த பஞ்சகம் என்னும் க்ரந்தத்தில் (சூத்ரம் - 48) ஓர் விஷயம் அருளிச் செய்கிறார்.

(1) அந்ந தோஷம் ஜ்ஞான விரோதியாகக்கடவது.

(2) ஸஹவாஸதோஷம் போக விரோதியாகக்கடவது.

(3) அபிமாநம் ஸ்வரூப விரோதியாகக்கடவது.

இம்மூன்றில் முதலில் அந்ந தோஷம் ஜ்ஞான விரோதியாகக்கடவது என்று அருளிச் செய்திருக்கும் விஷயம் மிகவும் முக்கியமானதாகும்.

''ஜ்ஞாநாத்மோக்ஷ:'' ''அஜ்ஞாநாத் ஸம்ஸார:'' என்பதற்கு சேர ப்ரபந்நனுடைய ஞானத்திற்கு இரண்டு விஷயங்கள் விரோதியாகும்.

அவை (1) துரந்ந பக்ஷண தோஷமும், (2) துஷ்ப்ரதி க்ரஹாந்த பக்ஷண தோஷமும் என்று காட்டப்படுகிறது.

(1) துரந்ந பக்ஷண தோஷம் - பகவத் ப்ரபந்நர்கள் அல்லாமல் ப்ராக்ருதருடைய அந்நம்

(2) துஷ்ட ப்ரதிக்ரஹாந்ந தோஷம் - அபிசஸ்த - பதித - சண்டாள - மிலேச்சாதிகள் மூலமாக தண்டுலாதி ரூபேண வந்த அந்நம்

அன்ன ஸுத்தியினால் ஞானம் என்பதற்கு ஏராளமான ஐதிஹ்யங்கள் உண்டு. ஆளவந்தார், பகவத் விஷயம் அறியாமல் ஐஸ்வர்யமே புருஷார்த்தமாக நினைத்ததை, ஸத்வநிஷ்டராகிய மணக்கால் நம்பிகளால் தரப்பெற்ற தூதுவளைக்கீரையே சிறந்த ஞானத்தைக் கொடுத்தது என்பதிலிருந்தும்,

பொய்யில்லாத மணவாள மாமுனிகள், மடத்து வாசலில் கீரையை வைத்தவனை அழைத்து நீயார்? இக்கீரை எவ்விடத்தில் உண்டானது? யாரால் இக்கீரைக்கு நீர் இறைக்கப்பட்டது என்று கேட்டு, அதனை அகற்றிய விஷயம் யதீந்த்ர ப்ரவண ப்ரபாவ க்ரந்தத்தில் காட்டப்பட்டுள்ளதைக் கொண்டும் அறிந்து கொள்ளலாம்.

இனி உண்ணும் சோறு எவை என்பதனைக் காண்போம். வார்த்தாமாலை 291-ம் வார்த்தையில் காட்டியுள்ளபடி

> ஸ்ரீ விதுரர் திருமாளிகையிலே அமுதுசெய்தது மடி தடவாத சோறிறே.
> இச்சொல்லற்ற சோறிறே அது, அச்சோறு உண்ணுஞ்சோறு

ஸ்ரீவசன பூஷணத்தில் 287-வது சூத்திரத்தின் வ்யாக்யானத்தில் மாமுனிகள் இவ்விஷயத்தை விளக்கியருள்கிறார்.

மாமுனிகள் வ்யாக்யானம் ''மடிதடவாத சோறாவது - முந்துற ஆதரத்தோடே இட்டு, பின்னை ''இதுக்கு காசு தரலாகாதோ'' என்று மடிச்சீரை சோதிக்கைக்காக மடியைப் பிடித்துத் தடவி, உண்டவன் நெஞ்சு உளையும்படி (வருந்தும்படியாக) பண்ணும் ப்ரயோஜநாந்தரபரர் இடும் சோறு போலன்றிக்கே. உண்டவன் நெஞ்சு உகக்கும்படி அநந்ய ப்ரயோஜனமான (வேறு பயன் கருதாத) சோறு. இப்படி இருந்துள்ள சோறிறே, பாவநத்வ, போக்யத்வ ப்ரசஸ்தமாம்படி ஸ்ரீ விதுரன் அவனுக்கு ஸமர்ப்பித்தது என்ற விசதவாக் சிகாமணியின் திவ்ய ஸ்ரீ ஸூக்திகள் சேவிக்கத்தக்கது.

ஆழ்வார் திருவாய்மொழியில் (6-7-1) உண்ணுஞ்சோறு என்று அருளிச் செய்துள்ள விஷயம் இவ்விடத்தில் அனுசந்திக்கத்தக்கது. அதே போன்று (6-8-2) (நெய்யமர் இன்னடிசில் சேவிக்கத்தக்கது).

இனி உண்ணாச் சோறுகள் எவை என்பதனை பார்த்தோமாகில், பிணச்சோறும், மணச்சோறும், விலைச்சோறும், புகழ்ச்சோறும், பொருட்சோறும், எச்சிற்சோறும் என்னும் ஆறு வகைகள். இனி இதனை சிறிது விவரிக்கிறேன்.

(1) பிணச்சோறு - மரணம் ஏற்பட்ட வீட்டில் (தீட்டுள்ள அகத்தில்) இடப்படும் சோறு.

(2) மணச்சோறு - திருமணம் முதலிய ஸம்ஸாரிகத்வமாக உள்ள சமயங்களில் சுத்தி இல்லாமல், பலவித அநாசரங்களோடு போடப்படும் சோறு.

(3) விலைச்சோறு - லாபம் ஒன்றையே முக்யமாகக் கொண்டு கடைகளிலே விலைக்கு விற்கும் சோறு.

(4) புகழ்ச்சோறு - புகழுக்காக இடப்படும் சோறாகில் அதற்காகவே அது விலக்கத்தக்கது.

(5) பொருட்சோறு - ஏதேனும் ஒரு காரணத்தைக் கருதியும், ப்ரயோஜனத்தை விரும்பியும் இடப்படும் சோறு விலக்கத்தக்கது.

(6) எச்சிற்சோறு - இதர தெய்வங்களுக்கு படைத்தது, வைணவர்கள் அல்லாத மற்றோர் உண்டு எச்சில் போன்று மிகுந்திருக்கும் சோறு.

இவை ஆறு சோறுகளும் விலக்கத்தக்கவைகள் என்று தீர்த்தங்குடி ஜீயர் அருளிச் செய்துள்ள விஷயம் க்ரந்தங்களிலே காணப்படுகிறது. எறும்பியப்பா அருளிச் செய்த விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம், மற்றும் பல பூர்வாசார்யர்களுடைய க்ரந்தங்களிலும் இவ்விஷயம் காட்டப்படுகிறது.

இனி ததீயாராதநம் செய்பவர்கள் இருக்க வேண்டிய விதம் எவ்வாறு? என்பதனை சிறிது விளக்குகிறேன்.

(1) உடையவர் திருமலைக்கு எழுந்தருளுகிறபோது உத்தர நல்லூரிலே எழுந்தருளினவளவிலே வானமாமலை தாஸர் என்று ஓர் கோபால ஸ்ரீவைஷ்ணவர் பாலமுது காய்ச்சிக் கொண்டுவந்து உடையவர்க்குப் பாங்காகப் பரிமாற, உடையவர் விரும்பி அமுது செய்ய, மீண்டு எழுந்தருளுகிறபோதும் அப்படியே பாங்காகக் கொண்டு வந்து பரிமாற, இது நன்றாயிருநததீ என்ன, ஸ்ரீவைஷ்ணவர் முன்பு விரும்பி அமுது செய்தவாறே, இப்போதும் பாங்காகக் கொண்டு வந்தேன் என்ன. அங்ஙனேயோ என்று ஒருநாள் உபவஸித்தருளினார் என்னும் ஐதிஹ்யம் கொடுப்பவர்களின் மனநிலை அறிந்து நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை உணர்த்துகிறது.

(2) மற்றொரு ஐதிஹ்யமும் நிச்சலும் நினைக்கத்தக்கது

விளைநகர்ப்பிள்ளை என்பவர் ஸ்ரீவைஷ்ணவர்களை அமுது செய்யப் பண்ணுவர் என்று கேள்விப்பட்ட பராசரபட்டர், இதுக்கு அபிப்ராயம் அறிய வேணும் என்று, அவர் திருமாளிகைக்கு எழுந்தருள, அமுது செய்ய நேரம் வந்தபோது, அகத்துக்கு எழுந்தருள வேண்டும் என்று விளைநகர்ப்பிள்ளை பட்டரை அழைக்க, பட்டரும்

விளைநகர்ப்பிள்ளையை அழைத்து, நீர் என்ன நினைத்து அமுது செய்யப் பண்ணுவீர் என்ன, அடியேன் பின்வரும் முதலிகளுக்கு முன்பு எழுந்தருளின முதலிகள் திருப்போனகப்பானை ஒழிச்சுவரென்கிற இது ப்ரயோஜநமாக நினைத்திருப்பன்" என்று பட்டரிடம் விண்ணப்பித்தார்.

உடனே பட்டர் மற்ற முதலிகள் முகம் பார்த்து இச்சொல்லற்ற சோறுண்டாகில் உஜ்ஜீவனம் என்று அருளிச் செய்தார். அதாவது விளைநிகர்ப்பிள்ளை, முதல் பந்தியில் அமருபவர், அடுத்த பந்தியில் அமருபவருக்கு உணவில்லாதபடி நிறைய அமுதுசெய்ய, நான் புதிதாக ஏராளமாக சமைக்க வேணும் என்ற நினைவுடன் இருப்பதால், இது ஏராளமாக விருந்திட்டோம் என்னும் புகழுக்காக இவர் விருந்திடுவதைக் காட்டுவதாக பட்டர் திருவுள்ளம் பற்றி, இப்படி புகழை விரும்பும் சொல்லை சொல்லாமல் ஸ்வயம் ப்ரயோஜநமாக ஸ்ரீவைஷ்ணவ ததீயாராதனத்தை இவர் செய்தாராகில் இவருக்கு ஆத்ம உஜ்ஜீவனம் ஆகும் என்று அருளிச்செய்த வார்த்தை நினைக்கத்தக்கது.

ததீயாராதனம் செய்பவர்களுக்கு ஆறு குணங்கள் இருக்க வேண்டும் என்று ஆச்சான் பிள்ளையின் திருவுள்ளமாக காட்டப்படுகிறது. அவை இழவும், இரப்பும், இறுமாப்பும், துணுக்கமும், ஶோகமும், வாழ்வும், உண்டாக வேணும். இனி இதனை சிறிது விளக்குகிறேன்.

1. இழவு - பரார்த்த கைங்கர்ய பரனான இந்த ஸ்ரீவைஷ்ணவரின் பெருமைக்குத் தக்கபடி அமுதுசெய்ய கொடுக்க பெற்றிலோம் என்றும்.

2. இரப்பு - தான் அமுது படைத்ததாக நினையாமல், அவ்வைஷ்ணவர் நம் குடிசையில் அமுது செய்தது நம்முடைய பாக்கியம் என்ற நினைவு. மேலும் இது போன்ற பாக்யம் நமக்குக் கிட்ட வேணும் என்கிற நினைவும்.

3. இறுமாப்பு - ஸ்ரீ வைஷ்ணவர் நம் குடிசையில் அமுது செய்ததால், நமக்கு நிகரில்லை என்ற ஸாத்விக கர்வம் கொள்ளல்.

4. துணுக்கம் - அமுது படைக்கும்பொழுது ஏதேனும் அபசாரம் நேர்ந்துவிட்டதோ? என்னும் பயம்.

5. ஶோகம் - இத்துணை நாள் இந்த பாக்யம் நமக்குக் கிடைக்காமல் போய்விட்டதே என்கிற வருத்தம்.

6. வாழ்வு - ஸ்ரீவைஷ்ணவர் அமுது செய்ததால் தன் பிறவிப்பயன் பெற்றதாக நினைக்கையாகிய இந்த ஆறும் உண்டாக வேணும் என அருளிச்செய்துள்ளார்.

ததீயாராதனத்தில் அந்வயிப்பவர்களுக்கு இருக்க வேண்டிய விஷயங்கள் என்ன? என்பதனை சிறிது நோக்குவோம். விரோதிகளில் போஜந விரோதி என்று ஒன்று. அதாவது ஒரு வைஷ்ணவன் ஆதரத்தோடே சோறிடப்புக்கால் உண்ணுமவன் ஆஹார ஸௌஷ்டவம் நிரூபிக்கை. ஆஹாரஸௌஷ்டவம் என்றால், இந்த உணவு சுவையுடன் இருக்கிறதா,

இல்லையா என்று ஆராய்கை = இல்லாமல் அமுது செய்ய வேண்டியது. அதில் அந்வயிப்பவருக்கு குணமாகக் காட்டப்படுகிறது.

ததீயாராதன கைங்கர்யத்தின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டியது ஸ்ரீபாத தீர்த்தம் சேர்த்துக் கொள்ளுதல் என்பதே. அதனை சிறிது விவரிக்கிறேன். திருமங்கையாழ்வாரும், குலசேகரனும் இக்கைங்கர்யத்தில் தங்கள் அதிகமான ப்ரீதியுடன் ஈடுபட்ட சரித்திரம் நினைவிற் கொள்ளவேணும்.

ததீய ஸேவயா நித்யம் தத் உச்சிஷ்டான்ன போஜனாத் ।
தத் பாத தீர்த்த பானேன வேதாந்தின கலிவைரின!
நித்யம் வவ்ருதிரே தஸ்ய ஞான பக்த்யாதயோ குணா:
சுக்லபக்ஷே சந்த்ரமஸ: கலா யிவ தினே தினே ॥

என்கின்ற ஸ்லோகார்த்தம் சிந்தனை செய்யத்தக்கது. அடியார்களின் ஸேவையை நித்யமாகவும், அவர்கள் உண்டு மிகுந்த கலத்தில் உள்ளதை போஜனம் செய்தும், அவர்களுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தைப் பருகியும், ஈடுபட்ட ஆழ்வாருக்கு, ஞானம், பக்தி, முதலான குணங்கள் வளர்பிறையில் சந்திரனின் கலைகள் போலே தினமும் பெருகியது என்பதும்,

விஷ்ணு ஆராதன பர்யந்தம் தத்கைங்கர்ய ரதோண்பவம்
க்ருதாஞ்சலிர் நிராஹார: தஸ்யௌ தத்போஜனாவதி
ஸ்ரீபாத தீர்த்தம் ஸ்வீக்ருத்ய பஸ்சாத் பரம பாவனம்
பஸ்சாத் தத் புக்த சிஷ்டான்னம் பு புஜே குலசேகர:
தத: ஸ்ரீ வைஷ்ணவேப்யஸ்ச தேப்ய: பரம ஹர்ஷித:

என்று குலசேகராழ்வார் சரிதையில் சொல்லியுள்ளபடி, திருவாராதனம் முடியும் வரையில் அடியவர்களுக்கு கைங்கர்யம் புரிந்தும், அடியவர்கள் உண்டு முடியும் வரையில் தான் உண்ணாமல், பிறகு பரம பாவனமான ஸ்ரீ பாததீர்த்தத்தை ஸ்வீகரித்துக் கொண்டு, பிறகு அவர்கள் உண்டு மிகுந்த அன்னத்தை குலசேகரர் அமுது செய்தார் என்பதும் மனனம் செய்யத் தக்கவைகள்.

பெரிய பெருமாளின் ஆசார்ய ஸ்தானியரான பெரிய ஜீயருடைய சரித்திரத்தை நன்றாகப் பேசுகின்ற யதீந்த்ர ப்ரவண ப்ரபாவத்தில் மணவாள மாமுனிகளின் நித்யபடி அனுஷ்டானத்தினை சில ஸ்லோகங்கள் மூலமாகக் காட்டியுள்ளார்.

அத மாத்யாஹ்நிகம் க்ருத்யம் க்ருத்வா ஸத்வோத்தரம் முநி:
ஆராத்ய விதிவத் தேவ மத்வ பூத் ரங்க பூஷணம்
ததஸ் ஸம்முக ஸம் ஸ்பர்ஸ ரஸேந ஸுகந்திநா
ஶுசிநா ஸுகுமாரேண ஸத்வ ஸம் ஶுத்தி ஹேதுநா

பக்திபூதம் ப்ரபூதேந போஜ்யேந பகவத் ப்ரியாந்
தத் பரஸ் தர்ப்பயாமாஸ ததீய ப்ரேம வ்ருத்தயே
ஆத்மாநமாத்மநா பஸ்யந் போக்தாரம் புருஷம் பரம்
அநுயாகம் யதாயோகம் நிஸ் ஸங்கோ நிவர்த்தயத்

இதன் பொருள் யாதெனில், மாத்யாஹ்நிக அனுஷ்டானங்களை முடித்து, அரங்கநகரப்பனுக்கு முறையாக திருவாராதனம் கண்டருளச்செய்து, குணானுபவம் செய்து கொண்டு, அவ்வெம்பெருமானுடைய திருப்பவள ஸம்பந்தத்தினால் அமுதாக, பரிமளீதமாக, தூயதாக, மென்மையுடையதாக, ஸத்வமான குணத்திற்கும், மனத்தூய்மைக்கும் முக்கிய காரணமாய் இருப்பதான பகவத் ப்ரஸாதத்தால் எம்பெருமான் அடியார்களை, ததீய பக்திபூர்வமாக தத் கைங்கர்யபரராக அவர்களிடம் ப்ரேமம் வளர்வதற்குறுப்பாக, ஆராதித்தார். தாம் (ப்ரஸாதத்தை) அமுது செய்தருளுவதனால் தம் மூலமாக அந்தர்யாமியான பரமபுருஷனையே போக்தாவாக அத்யவஸித்து ஏற்றருளினார் என்கிறபடியே பெருமானமுது செய்தருளின அநந்தரம் தாமும் அமுது செய்தருளி, ''போனகஞ் செய்த சேடம் தருவரேல் புனித மன்றே'' என்னும்படி ஸுபாவனமான திருத்தளிகை ப்ரஸாதம் என்று பிள்ளைலோகஞ்சீயர் அருளிச் செய்துள்ள விஷயங்கள் ததீயாராதனையின் சிறப்பினை நன்கு எடுத்துக்காட்டுகிறது. இவ்விஷயங்கள் எறும்பியப்பா அருளிச்செய்துள்ள பூர்வ திநசர்யையின் ஆராத்யஸ்ரீநிதிம் என்கிற 29-வது ஸ்லோகத்திலும் காட்டப்பட்டுள்ளது காண்க.

ததீயாராதன கைங்கர்யம் நித்யம், கோயில்களிலும், மடங்களிலும், திருமாளிகைகளிலும், ராமானுஜ கூடங்களிலும், க்ரந்த காலக்ஷேபாதிகள் குறைவில்லாமல் நடக்க அவசியம் செய்ய வேண்டியது. ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீமுகம் எழுதும்போது நித்ய ததீயாராதன க்ரந்த காலக்ஷேபாதிகள் நடந்து வருவதாக அருளுவதைக் காண்கிறோம். நித்ய ததீயாராதனைப் போலே வருடத்தில் ஒரு சில நாட்கள் ததீயாராதனை அவசியம் செய்ய வேண்டும் என்பது கீழ்க்கண்ட திருமங்கை மன்னனின் சரித்திர ஸ்லோகங்களில் இருந்து தெரிய வருகிறது.

கார்த்திகே மாஸி திவஸே க்ருத்திகாதாரகான் விதே।
மஹாபிஷேகம் விதிவத்ய: க்ருத்வா கலி வைரிணோ॥
நைவேத்யம் ஷட்ர ஸோபேதம் தத: ஸம்யங் நிவேத்யச।
வைஷ்ணவான் ப்ராஹ்மணாந் பக்த்யா த்ராவிடாம் ணாய பாரகான்॥

போஜ யேத்ஸ நரோ முக்தோ விஷ்ணு லோகே மஹீயதே।
கார்திக்யாம் க்ருதிகர்க்ஷேச யத் தத் கலிஜித: சுபம்॥
தத் த்ராவிட ப்ரபந்தஸ்ய ஸமாப்தி திவசம் விது:।
தஸ்மின் தினே க்ருதம் பக்த்யா ததீயாராதனம் மஹத்॥

இதன் பொருள் : கார்த்திகையில் கார்த்திகை நன்னாளில் கலியனுக்கு முறைப்படி திருமஞ்சனம் செய்து, அறுசுவை உணவை பரகாலருக்கு அமுது செய்வித்து, வைஷ்ணவர்களாகிய, திவ்ய ப்ரபந்தத்தைக் கரைகண்ட அந்தணர்களுக்கு அமுது எவன்

செய்விக்கிறானோ, அவன் மரணம் அடைந்த பின் விஷ்ணுலோகத்தை அடைகிறான். கார்த்திகையில் கார்த்திகை நாள் திவ்ய ப்ரபந்தங்களை ஓதுவதை நிறுத்தும் தினமாகக் கொள்ளப்படுகிறது. அந்த தினத்தில் பக்தியோடு பெரிய ததீயாராதனம் செய்தால் அது கோடி மடங்கு சிறப்புடையது என்று அருளிச்செய்திருப்பது கண்டு உகக்க வேண்டும். ஆக, இதுவரை அன்னதானத்தின் பெருமையையும், அதைக் காட்டிலும் விஷ்ணு பக்தர்களுக்கு செய்யும் ததீயாராதன கைங்கர்யம் உயர்ந்தது என்பதனையும், பஞ்ச மஹாயக்ஞங்களில் ததீயாராதனம் ப்ரதானம் என்பதும், க்ருஹஸ்தனுக்கு இக்கைங்கர்யம் நன்றாக விதிக்கப்பட்டுள்ளது என்பதும், ஞானத்தால் மோக்ஷம் என்பதன் தாத்பர்யத்தில் இதுவும் சேர்ந்தது என்கிற விஷயமும், இவ்விஷயத்தில் பூர்வாசார்யர்கள் காட்டிய வழிகளும், ததீயாராதனம் செய்பவர், அன்வயிப்பவர்களுக்கு உண்டான தகுதிகளும், ததீயாராதனத்தின் முக்கிய நோக்கம் ஸ்ரீபாத தீர்த்தம் சேர்த்துக் கொள்ளுதல் என்பதும், திருமங்கையாழ்வார், குலசேகரர், மணவாள மாமுனிகள் முதலிய பெரியோர்கள் அனுஷ்டித்துக் காட்டிய விதமும், ததீயாராதன கைங்கர்யத்தின் பலனும் என்கிற விஷயங்களை யதாமதி அடியேன் விண்ணப்பித்தேன். நூற்றாண்டு விழா காணும் நம் ஸ்வாமி இக்கைங்கர்யத்தில் மிகுந்த ஊக்கமுள்ளவர் என்பது ஸ்வாமியுடன் இருந்து சேவிக்கும் பாக்யம் பெற்றவர்கள் அடியேனிடம் விண்ணப்பித்துள்ளதைக் கேட்டிருக்கின்றேன். ஸ்வாமியின் ஸ்ரீக்ராமமான காரப்பங்காடு அபீஷ்ட வரதன் ஸன்னதியில் இன்றளவும் இக்கைங்கர்யம் அவிச்சிந்நமாக நடைபெற்று வருவது கண்கூடு. ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள புல்... என்னும் இடத்தில் ஸ்வாமி ஏற்று நடத்திய இக்கைங்கர்யத்தின் பாங்கினை அதில் அந்வயித்தவர்கள் இன்றளவும் போற்றிப் புகழ்கின்றனர். ஞானம், அனுட்டானம் இவை நன்றாகவே உடையனான குருவாக எழுந்தருளியிருந்த, ஸ்வாமியின் வழியைப் பின்பற்றியே, காரப்பங்காடு ஸ்வாமியின் வழியாகவே இன்றைய உபந்யாசகர்கள் திகழ்கின்றனர் என்றால் அது மிகையன்று. ஸ்வாமியின் வைபவத்தை ஸ்வாமியினுடைய திருக்குமாரர்களும், தேஹபந்துக்களும், ஆத்ம பந்துக்களும் சேர்ந்துநடத்தும் இவ்வுத்சவத்தில் அன்வயித்து ஸ்வரூப லாபம் பெற அடியேனுக்கும் ஓர் வாய்ப்பினை நல்கிய கமிட்டியினருக்கு அடியேனுடைய க்ருதஜ்ஞதையை தெரிவித்து பல்லாண்டுபாடி அமைகின்றேன்.